1967 ஜுன் 24]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படி உத்தேசம் ஒன்றுமில்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மீண்டும் ஒரு வருஷம் வேலை பார்ப்பதற்கு எக்ஸெம்ப்ஷன் இருப்பதை அரசாங்கம் தொடர்ந்து நீடிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனியார் பள்ளிகளில் 55 வயதுக்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம், அவர்கள் 60 வயது அடைகிற வரையில் என்று சொல்லியிருக்கிறது. அதை 60 வயதுக்கு மேல் நீடிக்கும் எண்ணம் இல்லை.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister for Education to state why there is discrimination in the age of retirement between Government institutions and private aided institutions?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அது நீண்டகால மாகவே இருந்து வருகிற சட்டப்படி தனியார் பள்ளிகளுக்கு அனுமதி அளிக்கும்போது 60 வயது வரையில் வைத்துக் கொள்ள லாம் என்று சட்டத்தில் இருக்கிறது. இப்போது இருக்கக் கூடிய மாறுபாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்கலாமா என்பது யோசனையில் இருக்கிறது.

திரு. கே. சகாதேவக் கண்டர் : ஆசிரியர்கள் பாதுகாப்பு நிதி செலுத்தி வருகிறார்கள். அதற்கு 4 சத விகிதம் வட்டி கொடுக்கப் படுகிறது. தனியாரிடத்தில் கொடுத்தால் 9 சத விகிதம் வட்டி கிடைக்கும். வட்டி விகிதத்தை உயர்த்த அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : துணைக் கேள்வி, மூலக் கேள்விக்குத் தொடர்புடையது அல்ல.

Bridge across Kusasthali river

* 67 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to construct a bridge or Causeway across Kusasthali river near Pallipet, Tiruthani taluk, Chingleput district?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பொருளாதார முக்கியத் துவம் வாய்ந்த அல்லது ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் முக்கியத்துவம் ஏற்படுத்தக்கூடிய சாலைகளை அமைத்தல், மேம்பாடு செய்தல் குறித்த வேலைத்திட்டத்தின்கீழ் நான்காம் திட்டக்கால அளவில் உதவி மானியம் வழங்கப் பெறு வதற்காக இம்மாநில அரசு இந்திய அரசுக்குப் பட்டியல் ஒன்றை அனுப்பியுள்ளது. இப்பட்டியலில் 10 சாலை வேலைகள் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கேள்வியில் குறிப்பிடும் பள்ளிப்பட்டு அருகேயுள்ள குசஸ்தலி ஆற்றுப்பாலம் வேலை மேற் சொன்ன 10 வேலைகளில் மூன்றாவது வேலையாக அமைகிறது.

திரு. கே. விநாயகம் : சார், அந்த குசஸ்தலி நதியின் மேல் கட்டப்படப் போகிற பாலத்தை டாம்-கம்-ஓவர்பிரிட்ஜ் மாதிரி

அமைத்தால் நலமாக இருக்கும். மழைக் காலத்தில் வெள்ளத் தண்ணீர் ஓடுகிறது. வெள்ளம் வந்து சேதாரம் அடைந்து, வெள்ளத் தண்ணீர் ஆந்திர மாநிலத்திற்குப் போய், பிறகு தமிழகத்தைச் சேருகிறது. ஆகவே அந்தத் தண்ணீரை டாம் கட்டித் தடுத்து விவசாயத்திற்கு உபயோகப்படுத்தும் யோசனை உள்ளதா ? இல்லையென்றால் இனிமேலாவது யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பாலம் கட்ட 20 லட்சம் ரூபாய் வேண்டியிருக்கிறது. அதற்கே மான்யம் கேட்டிருக்கிறோம். அதுபற்றி மறுபரிசிலனை செய்யவேண்டுமென்று மத்திய அரசு கேட்டிருக்கிறது. அதற்குப் பதில் எழுதியிருக்கிறோம். உறுப்பினர் யோசனையைப் பின்னால் ஆராயலாம்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 10 வேலைகள் என்று தெரிவித்தார்கள். அவை, எவை எவை என்று அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (1) மணப்பாறை-துறையூர் சாலையில் முசிரியையும் குளித்தலையையும் இணைக்கும் வகையில் காவிரியின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டுதல்;

(2) மல்லையாபுரம் அருகேயுள்ள சமவெளிகளிலிருந்து பன்றி மலைக்கும் அங்கிருந்து பச்சலூருக்கும் சாலை ஒன்றை அமைத்தல்;

(3) இப்போது குறிப்பிடப்பட்டுள்ள இராமகிருஷ்ணராஜுப் பேட்டை-பள்ளிப்பேட்டை சாலையில் குசஸ்தலி ஆற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல்;

(4) திருப்புணவாசல் முதல் உறையூர் வரை சாலை அமைத்தலும் சரளைக்கல் போடுதலும்;

(5) ரகுநாதபுரம் முதல் தஞ்சாவூர் வரையில் உள்ள சாலையை மேம்படுத்துதலும் சரளைக்கல் போடுதலும்.

(6) 49-ம் எண் தேசிய நெடுஞ்சாலையில் சீர்திருத்தம்;

(7) முதுகுளத்தூர்-உத்திரகோசமங்கை சாலையில் சீர் திருத்தம் ;

(8) நரிக்குடி-புல்வாய்க்கரை சாலையில் சீர்திருத்தம்;

(9) முதுகுளத்தூர்-சிக்கல் சாலையில் கருங்கல் சானை பரப்புதல், மதகுகள் கட்டுதல்;

(10) சேலாஸ்-கோலக்கொம்பை சாலையில் மேம்பாடு செய்தல். சரளைக்கல் சாலையையும் தார் சாலையையும் அகலப்படுத்துதல்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, 10 வேலைகளை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளதாக அமைச்சர் அவர்கள் படித்துக் காண்பித்தார்கள். இதற்கு எவ்வளவு மதிப்பீடுகள் போடப்பட்டுள்ளன ? மத்திய அரசு எடுத்துக்கொள்ளவில்லை யானால், இந்த அரசே துரிதமாக எடுக்க துரிதமான அமைச்சர் முன்வருவாரா ?

1967 ஜூன் 24]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதிலே மத்திய அரசு இங்கிருந்து மொத்தமாக அனுப்பப்பட்ட வேலைகளில் இரண்டைப்பற்றித் தாற்காலிகமாக முடிவு எடுத்து அனுப்பியிருக்கிறது. ஒன்று, கிழக்குக் கடற்கரைச் சாலையில் மாமல்லபுரம்—மரக்காணம் பிரிவில் சாலை அமைக்கும் திட்டமும், பாலங்கள் அமைக்கும் திட்டமும், இரண்டாவதாக, நண்பர் திரு. விநாயகம் அவர்கள் கேட்ட இராமகிருஷ்ணராஜூப்பேட்டை-பள்ளிப்பேட்டை சாலையில் குசஸ்தலி ஆற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டும் திட்டம். இந்த இரண்டு திட்டங்களுக்கும் அனுமதி அளித்து மேற்கொண்டு விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள். அந்த விவரங்கள் இப்போது அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. கே. விநாயகம் : சார், இப்போது குறிப்பிட்ட, கட்ட வேண்டுமென்று உத்தேசித்திருக்கிற சாலைக்குத் தெற்கே இன்னொரு பாலத்தை ஆந்திர சர்க்கார் கட்ட வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டு, அந்தப் பாலத்தோடு அவர்கள் டாம் கட்டி அங்கு வரும் தண்ணீரைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்ற யோசனையோடு செய்கிறார்கள் என்று எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதைப் பரிசீலித்து அப்படிச் செய்வது தெரிந்தால் அவர்களுக்கு தயவுசெய்து எழுதி, இப்படி எங்களுக்கு வருகிற நல்ல பயனைத் தடுக்கக் கூடாது என்று சொல்லி அதைத் தடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிப்பட்ட தகவல் எதுவும் இல்லை. அப்படிப்பட்ட தகவல்கள் உண்மையாக இருக்குமானால், வேண்டிய முயற்சிகள் உடனடியாக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, குளித்தலை-முசிறி காவிரிப் பாலம் எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாம் கோரிய 10 வேலைத் திட்டங்களில் உதவித் தொகை அளிக்க மத்திய சர்க்கார் இரண்டு திட்டங்களைத் தான் முதலில் எடுத்துக் கொள்வதற்கு அனுமதி அளித்திருக்கிறது. இப்போது மேலும் நான்கு திட்டங்களைக் குறித்து வலியுறுத்தி எழுதியிருக்கிறோம். அதிலே, முசிறிப் பாலம் முதன்மை இடத்தைப் பெறுகிறது.

திரு. கே. இரெ. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலை என்றால் சென்னையிலிருந்து கோடிக் கரைக்குப் போகும் சாலை என்று நினைக்கிறேன். அதற்கு வேலை எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மறுபடியும் மத்திய அரசாங்கத்தில் இங்கிருந்து சில விவரங்கள் கேட்டிருக்கிறார்கள். விவரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மத்திய அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

[1967 ஜூன் 24

மையக் கிராம வளர்ச்சி நிலையங்கள்

* 68 வினா—திரு. கரு. சீமைச்சாமி : மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை, இராமநாதபுர மாவட்டங்களில் எத்தனை கேந்திர கிராம விஸ்தரிப்பு நிலையங்கள் உள்ளன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மதுரை மாவட்டத்தில் 12 மையக் கிராமக் கால்நடை வளர்ச்சி நிலையங்களும் Key Village Extension Centres இராமநாதபுரம் மாவட்டத்தில் 7 நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த கேந்திர கிராம விஸ்தரிப்பு நிலையங்களின் வேலைத் திட்டங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 5,000 பசுக்கள் இருக்கிற இடத்தில், 50 காளைகளை தனிப்பட்டவர்களிடத்தில் வழங்கி, கருத்தரிப்பதற்கு விவசாயிகள் கட்டணம் ஏதும் செலுத்தாத முறையில் செயலாக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. இராசாங்கம் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் கேந்திர கிராம விஸ்தரிப்புகள் 12 என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உத்தமபாளையம், விளாம்பட்டி, திருமங்கலம், சாணார்பட்டி, கோம்பை, சிலுவாத்தூர், கம்பம், ராசிங்கபுரம், சிபலக்கோட்டை, கல்லாந்திரி, வீரபாண்டி, நத்தம்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, முன்பு கொடுத்த பொலிகாளைகளெல்லாம் நடப்பதற்கே திண்டாடிக் கொண்டிருக்கின்றனவே, அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்குமா ? அதைப்பற்றி மறுபரிசீலனை செய்து நல்ல காளைகளைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : முன்னூறு பசுக்களுக்கு அது சர்வீஸாகி இருந்தால் யாரிடத்தில் வழங்கினோமோ அவருக்கே இலவசமாகக் கொடுத்து விடுகிறோம். நடக்க சக்தி யில்லாத மாடுகளை அவர்களுக்கே இலவசமாகக் கொடுத்து விடுகிறோம். அப்படி எந்த எந்த இடத்தில் இருக்கின்றன என்ற தகவல் கொடுத்தால் சர்க்கார் பரிசீலித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பிரசித்தி பெற்ற காங்கேயம் இனம் உற்பத்தியாகும் இடங்களில் இந்த செயற்கைக் கருத்தரிப்பு முறை மூலம் தார்பார்க்கார் இனத்தைக் கலப்பு செய்வதை விவசாயிகள் எதிர்ப்பதால் பழைய காங்கேய இனத்தையே செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களில் புகுத்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?